# ஆசார்ய வ்ருக்ஷம்

(ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன், கோவை ஆஸ்ரமத்தின் மின் மாதாந்தர பத்திரிகை)




## சிறப்பு இணைப்பு
## ஸ்ரீ கூர்ம அவதார ஜெயந்தி
**14.06.2023**

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| | **Tamil** | |
| 1 | துன்பங்கள் அனைத்தையும் போக்கி நல்லருள் புரியும் கூர்மபகவான் | 1 |
| 2 | சித்திரப் பேச்சு: திருமாலின் கூர்ம அவதாரம் | 6 |
| 3 | தசாவதார பொய்யன் | 7 |
| 4 | ஸ்ரீகூர்மவதாரம் ஸ்வாமி தேசிகன் பார்வையில்..... | 8 |
| | **English** | |
| 5 | 3 Main Temples Where Lord Vishnu Is Worshipped as Kurma Avatar | 14 |
| | **Slokas in Devanagari** | |
| 6 | कूर्मस्तुतिः 1 | 18 |
| 7 | कूर्मस्तुतिः 2 | 19 |
| 8 | कूर्मस्तोत्रम् | 20 |
| 9 | मुनिभिः कृतं कूर्मस्तोत्रम् | 22 |
| 10 | श्री कूर्म चतुष्कम | 24 |
| 11 | ककारादि श्रीकूर्माष्टोत्तरशतनामस्तोत्रम् | 25 |
| 12 | ककारादि श्रीकूर्माष्टोत्तरशतनामावलिः | 28 |



**Sri Koormam Temple**





**Live tortoises in the Kurmanatha Swamy temple's premises, its preservation efforts**



**Sri Koormam Temple**





One of the mural paintings in the temple, featuring Vishnu as Ranganatha



# Sri Koormam Temple

**The Kurmanathaswamy temple, also known as the Kurmanatha temple, Srikurma or Srikurmam temple, is a Hindu temple dedicated to Kurma – the second avatar of Vishnu. It is located in Srikurmam village, Srikakulam district in Andhra Pradesh.**

# 1.துன்பங்கள் அனைத்தையும் போக்கி நல்லருள் புரியும் கூர்மபகவான்



உலகில் எப்போதெல்லாம் அதர்மம் பெருகி துன்பங்கள் வாட்டுகிறதோ அப்போதெல்லாம் திருமால் அவதரித்து, அதர்மத்தை அழித்து தேவர்களையும் மக்களையும் காப்பாற்றி தர்மம் தழைக்கச் செய்கிறார். அப்படி பகவான் எடுத்த அவதாரங்களே தசாவதாரங்கள் என்று போற்றப்படுகின்றன. பகவான் எடுத்த இரண்டாவது அவதாரம்தான் கூர்ம அவதாரம்.



கூர்மம் என்றால் ஆமை என்று பொருள். பரமாத்மா தனது இரண்டாவது அவதாரத்துக்கு ஆமையைத் தேர்ந்தெடுத்தது ஏன் தெரியுமா? ஆபத்துக் காலத்தில் ஆமை தன் உடல் உறுப்புகளை ஓட்டுக்குள் இழுத்துக்கொண்டு, எப்படித் தன்னைப் பாதுகாத்துக்கொள்கிறதோ அப்படியே நாமும் அடக்கத்துடன் இருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் எனும் உயரிய தத்துவத்தை நமக்கு விளக்குவதற்கே. இதையேதான் திருவள்ளுவர் 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்புடைத்து' என்று கூறியிருக்கிறார்.

திருமால் நிகழ்த்திய மற்ற அவதாரங்கள் அனைத்தும் தீயவர்களை அழிப்பதற்காகவே எடுக்கப்பட்டவை. ஆனால், கூர்ம அவதாரத்தில் அவர் யாரையும் அழிக்கவில்லை. மாறாக தேவர்களுக்கு அமிர்தம் கிடைக்கச் செய்தார். பாற்கடல் கடைந்தபோது நிகழ்ந்த இந்த அற்புதத்தில் அமிர்தம் மட்டுமல்லாமல் திருமகள், மருத்துவக் கடவுள் ஆகியோருடன் காமதேனுப் பசு, வலம்புரிச் சங்கு, கற்பகவிருட்சம், ஐராவத யானை போன்றவையும் தோன்றின.



இத்தகைய பெருமையுடைய கூர்ம அவதாரமானது ஆனி மாதம், தேய்பிறை, துவாதசி திதியில் நிகழ்ந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அதன்படி இன்று (14.06.2023) ‘கூர்ம ஜயந்தி’ கொண்டாடப்படுகிறது. திருமால் கூர்மவதாரம் எடுத்த புண்ணிய தினத்தில் அதன் பெருமைகளைப் பற்றி அறிந்து கொள்வோம்...


சில நேரங்களில் அலட்சியத்தால், அறியாமல் செய்த சிறு செயல்கூட மிகப்பெரிய நிகழ்வுக்குக் காரணமாகிவிடுகிறது. அன்று, துர்வாச முனிவர் அளித்த தெய்விக மாலையை அலட்சியம் செய்தபோது இந்திரன் நினைத்திருக்க மாட்டான். இது மிகப்பெரிய அழிவுக்கும், அதன்பிறகு கூர்ம அவதாரத்துக்கும் காரணமாக இருக்கும் என்று.




ஒரு முறை வித்யாதரப் பெண் ஒருத்தி திருமாலையும் லட்சுமியையும் துதித்து வீணை மீட்டினாள். இதனால் மகிழ்ந்த லட்சுமி தன் கழுத்தில் இருந்த தெய்விக மாலையைப் பரிசாக வழங்கினாள். அந்த மாலையைத் துர்வாச முனிவருக்குக் காணிக்கையாக அளித்தாள், அப்பெண். அதைத் தன் சடாமுடியில் தரித்துக்கொண்டார் துர்வாசர். சில காலம் கழித்து துர்வாசர் இந்திரனைச் சந்தித்தபோது அவனுக்குப் பரிசாக அந்த மாலையை வழங்கினார். அதை

அலட்சியமாகப் பெற்று யானையின் மத்தகத்தின் மீது வீசினான், இந்திரன். யானை அந்த மாலையைத் தன் காலில் போட்டு மிதித்தது. இதைக் கண்ட துர்வாசர் சினம் கொண்டு, “உன் செல்வம் அனைத்தும் அழியட்டும். நீயும் தேவர்களும் உங்கள் பலத்தை இழந்து துன்புறுவீர்கள்” என்று சாபமிட்டார்.

துர்வாசர் சாபத்தால் அல்லல்பட்ட தேவர்கள் அசுரர்களிடம் தோற்றார்கள். தம் சாபம் தீர வேண்டி தேவர்கள் திருமாலைச் சரணடைந்தார்கள். அப்போது திருமால், “பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தை எடுத்து அதை உண்டால் இழந்த பலத்தை மீண்டும் பெறலாம்” என்று யோசனை கூறினார். அதனால், தேவர்கள் அசுரர்களிடம் நட்புடன் பேசி அவர்கள் உதவியுடன் மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். மந்தார மலை பாற்கடலில் சிக்கிக்கொண்டதால் அது அசையக்கூடவில்லை. மீண்டும் திருமாலிடம் முறையிட்டார்கள் தேவர்கள். அப்போது திருமால் ஆமையாகக் கூர்ம அவதாரம் எடுத்து கடலுக்குள் சென்று மந்தார மலையைத் தன் முதுகில் தாங்கிக்கொண்டார்.
தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையத் தொடங்கினார்கள். வலி தாங்க முடியாத வாசுகி ஆலகால நஞ்சைக் கக்கியது. அதனால் பிற உயிர்களுக்கு ஆபத்து ஏற்படாவண்ணம் சிவபெருமான் அதை விழுங்கினார். அந்த நஞ்சு வயிற்றுக்குள் இறங்காமல் பார்வதி தேவி கழுத்தோடு நிற்கும்படி இறுக்கிப் பிடித்தாள். அதனால் நீலநிற கழுத்தைப் பெற்ற சிவபெருமான், ‘நீலகண்டன்’ என்று அழைக்கப்பட்டார்.



பாற்கடல் கடையக் கடைய முதலில் அதிலிருந்து காமதேனு என்ற பசு தோன்றியது. அதைத் தொடர்ந்து பொன்மயமான ஒளியுடன் உச்சைசிரவஸ் எனும் ஏழுதலைக் குதிரை, நான்கு தந்தத்துடன் கூடிய ஐராவதம் எனும் யானை, பஞ்ச தருக்கள் எனப்படும் அரிசந்தனம், கற்பகம், சந்தனம், பாரிஜாதம், மந்தாரம் ஆகிய தேவ மரங்கள் தோன்றின. இதற்குப் பிறகு மூத்த தேவி, அப்சரஸ் கன்னிகைகள், வருணி, சுராதேவி ஆகியோர் தோன்றினார்கள்.

அதற்குப் பிறகு ஸ்ரீதேவி எனப்படும் மகாலட்சுமி, சந்திரன்,
சிந்தாமணி தோன்ற கடைசியாகத் தன்வந்திரி அமிர்தத்துடன் தோன்றினார்.



தாங்க முடியாத வலியைத் தாங்கிக்கொண்டு, இப்படிப் பல பொருள்கள் தோன்றக் காரணமாக இருந்த அவதாரம்தான் கூர்ம அவதாரம். காஞ்சிபுரத்திலுள்ள கச்சபேஸ்வரர் கோயில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில், தூத்துக்குடி அகரம் தசாவதாரக் கோயில் ஆகியவற்றில் கூர்மவதார பெருமாளை வணங்கலாம். இந்தியாவில் கூர்ம அவதாரத்துக்கென்று இருக்கும் ஒரே ஆலயம் அருள்மிகு கூர்மநாதர் ஆலயமாகும். இது, ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் ஸ்ரீகாகுளம் அருகே இருக்கிறது. இங்கும் சென்று ஸ்ரீகூர்மநாதரை வழிபடலாம். சகலவிதமான சனி தோஷங்களையும் போக்கும் வல்லமை பெற்றவர் கூர்ம பகவான். அதனால், சனி தோஷத்தால் அல்லல்படுபவர்கள் இன்று இவரை வணங்கி வழிபடுவது சிறப்பானது. துன்பங்கள் அனைத்தையும் போக்கி நல்லருள் புரியும் வல்லமை கொண்டவர் கூர்ம மூர்த்தி. கூர்ம அவதாரத்தை வணங்கினால் ஞானம், சாந்தம், வீரம், செல்வம் என்று அனைத்தும் கிடைக்கும். அதனால், அவரது அவதார தினமான இன்று கூர்மவதார பெருமாளை வணங்கி வாழ்வில் அனைத்து நன்மைகளையும் பெறுவோம்...

Source : சி.வெற்றிவேல்/https://www.vikatan.com/spiritual/festivals/-koormajayanthi-article-special

# 2.சித்திரப் பேச்சு:
# திருமாலின் கூர்ம அவதாரம்



தேவர்களும் அசுரர்களும் இணைந்து பாற்கடலை கடைந்து அமுதம் எடுக்க முற்பட்டபோது மந்தர மலை தள்ளாடியது. அப்போது திருமால் கூர்ம அவதாரம் எடுத்து மலையைத் தூக்கித் தாங்கினார். முதலில் ஆலகால விஷம் வெளிப்பட்டதால் அனைவரும் பயந்து ஓடியபோது, திருமால் கூர்ம அவதார வடிவில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து பூஜித்தார்.

அந்த சிவலிங்கத்துக்கு 'கச்சபேஸ்வரர்', 'கச்சாலீஸ்வரர்' என்ற பெயர்கள் ஏற்பட்டன. கச்சபம், கூர்மம் என்றால் ஆமை என்று பெயர். ஆமை உடலோடு திருமால் சிவலிங்கத்தைப் பூஜை செய்யும் கோலத்தில் காணப்படும் இந்தச் சிற்பம் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியில் ராஜகோபுரத்துக்கு முன்புள்ள பதினாறு கால் மண்டபத் தூண் ஒன்றில் உள்ளது. தலையில் அழகிய கிரீடம், காதுகளில் குண்டலங்கள், மேல் கரங்களில் சங்கு சக்கரம் தாங்கிய வண்ணம், கீழ் கரங்களில் குடத்தின்மூலம் அபிஷேகம் செய்வதுபோல் உள்ளார்.

இடையில் அழகிய அணிமணிகளும் திகழ்கின்றன. ராஜகோபுரமும் அதற்கு முன்புறம் எட்டு கால் மண்டபம் மற்றும் பதினாறு கால் மண்டபம் விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டவை. ஆனால் இத்திருக்கோயில் பல்லவர்கள் காலத்துக்கு முன்பே சிறப்புற்றிருந்ததாக இங்குள்ள கல்வெட்டுகளில் காணப்படுகிறது. காஞ்சிபுரம் நகரில் கச்சபேஸ்வரர் என்ற பெயரில் தனிக்கோயிலும் உள்ளது. மேலும் சென்னை நகரில் பிராட்வே பகுதியில் கச்சாலீஸ்வரர் என்ற பெயரில் ஒரு திருக்கோயிலும், சிங்கப்பெருமாள் கோயில் அருகில் திருக்கச்சூர் என்ற ஊரில் ஸ்ரீ கச்சபேஸ்வரர் என்ற பெயரில் ஒரு திருக்கோயிலும் உள்ளன. ஸ்ரீகூர்மம், கூர்ம அவதாரத்தின் பெயரிலேயே, கருவறையில் ஆமை வடிவிலேயே இறைவன் அருள் பாலிக்கும் அற்புத திருத்தலம் ஆகும். ஆந்திர மாநிலத்தில் ஸ்ரீ காகுளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது ஸ்ரீ கூர்மம்.

Source : https://www.hindutamil.in/news/supplements/anantha-jothi/698500-thirumal-avatharam.html

# 3 .தசாவதார பொய்யன்

## வைகுந்தவாசி நாட்டேரி ராஜகோபாலன் ஸ்வாமி

(ஸ்ரீ ரங்கநாத பாதுகாவிலிருந்து)

ஸ்ரீ கூர்மாவதாரம் :- இந்த அவதாரத்தின் போது பெருமாள் ஏகப்பட்ட அவதாரம் செய்தாராம்.

ஸுமுக: ஸூக்ஷ்ம: ஸுகோஷ: ஸுகத: ஸுஹ்ருத் ।
மநோஹரோ, ஜிதக்ரோத: வீரபாஹுர் விதாரண: ॥
ஸ்வாபந: ஸ்வவஸோ வ்யாபீ, நைகாத்மா, நைககர்மக்ருத் ॥

என்று வ்யாஸர் இந்த அம்ருத மதன ப்ரகரணத்தில் பகவானின் 14 நாமாக்களை அநுபவிக்கிறார் ஸ்ரீ ஸஹஸ்ரநாமத்தில்.

இதில் ஸூக்ஷ்ம: என்பதின் பொருள். இவர் எவ்வளவு கபடி என்பதை அஸுரர்கள் அறியாத வண்ணம் அம்ருதம் கடைந்தபோது பெருமாள் நடந்து கொண்டாராம்.

அஜிதன், கூர்மம், தேவர்களின் பக்கம் ஒரு தேவனாக, அஸுரர்களின் பக்கம் ஒருவராக (கடைவதற்கு), வாஸுகிக்கு வலிக்காமல் இருப்பதற்காக அதற்குள் ஒரு ஆவேசமாக, அம்ருதம் கொண்டுவந்த தன்வந்தரியாக, அம்ருதம் பிரித்துக் கொடுக்க ஒரு மோஹினிப் பெண்ணாக இப்படிப் பல அவதாரங்களைச் செய்ததால் இந்த அவதாரத்தில் பெருமாளை நைகாத்மா என்கிறார் வ்யாஸர். பல வேஷதாரீ என்று அர்த்தம். இந்த ப்ரகரணத்தில் மோஹினியாக வந்து பொய்யான பொய் பேசி அஸுரர்களை ஏமாற்றினார். இருக்கட்டும் !

கூர்மாவதாரம் செய்து கடலுக்குள் போனது எதற்கு?

தன் காதலி உள்ளே இருக்கிறாள். அவளைத் தனியே சென்று காண்பதற்காக ! லக்ஷ்மீ கல்யாணத்துக்குமுன்னே, லக்ஷ்மியைத் தனியே ஸந்தித்த இந்த ஏற்பாட்டில் கள்ளத் தனம் உண்டா? இல்லையா?

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ஸ்ரீவராஹ மஹாதேசிகாய நம:

# 4. ஸ்ரீகூர்மவதாரம் ஸ்வாமி தேசிகன் பார்வையில்..

கட்டுரை முயற்சி: க்ருஷ்ண குமார தாத தாஸன், புண்ணிய புரி (பூனா)

## முன்னுரை:

அடியேன் எழுதப் புகும் இந்த வியாஸத்தின் முக்கிய நோக்கம், ஸ்ரீகூர்ம அவதார விஷயங்களை அறிந்து கொள்வது. இந்த அவதாரம் திருமாலின் தசாவதாரங்களில் சிறப்பு உடைய ஒன்று என்பதை எல்லோரும் அறிந்திருக்கலாம். ஆனாலும், அவற்றை ஸ்வாமி தேசிகன் எவ்விதம் தமது படைப்புகளில் கவிதை நடையில், கருத்துக்களாக வெளிக் கொணர்ந்து, கையாண்டு, சுவையும், சுவாரஸ்யமும் வெகுவாக, கலந்து தருகின்றார் என்பதையும் இரசித்து மகிழவே, அடியேன் கட்டுரையில் முயற்சி செய்கிறேன். ஆசார்யனை முதலில் வணங்கி அனைவரது ஆசிகளும் வேண்டித் துவங்குகின்றேன். இந்த வியாஸம் வரவிருக்கின்ற ஸ்ரீகூர்மஜயந்தியை முன்னிட்டு திருமாலுக்கு அடியேன் செய்ய விரும்பும் சிறிய சமர்ப்பணம்...

## ஸ்ரீகூர்மவதார பெருமை:

திருமால் எடுத்த தசாவதாரங்களில் இரண்டாவதாக பெருமை பெற்றது ஸ்ரீகூர்மவதாரம் ஆகும். கூர்மம் என்பது ஆமையைக் குறிக்கும். தேவர்களை விட அசுரர்கள் வலிமை, வீறு கொண்டு விளங்கியதால், அசுரர்கள் எப்போதும், தேவர்களோடு சண்டையிட்டு, அவர்களை தோற்கடித்து இருந்ததால், தங்களுக்கு வலிமையைத் தந்தருள வேண்டியும், அசுரர்களை சண்டையில் எதிர் கொள்ளவும், பாற்கடலில் பள்ளி கொண்டிருந்த பரந்தாமனை இறைஞ்சி நின்றனர். அப்போது தக்க சமயத்தில் அதற்கான தீர்வு கிடைக்கும் என அவர்களுக்கு பெருமாள் உறுதியளித்தார். அதன்படி, தேவர்களுக்கு அழியாத சக்தியை அளிக்க வல்ல அமிர்தத்தை கிடைக்கச் செய்ய பாற்கடலை கடையவும், அதற்காக தேவர்கள் அசுரர்களோடு இணைந்து அதனைச் செய்ய அழைத்தார். மந்தர மலையை

மத்தாகவும், வாசுகி என்ற பாம்பை மலையைச் சுற்றி கயிறாகவும் வைத்து தலைப்புறத்தில் அசுரர்களையும், வால் புறத்தில் தேவர்களுமாக இருந்து கடைய ஆரம்பித்தனர். ஆனாலும், அது சரியாக நடைபெறாது போகவே, மலையைக் கடலுக்குள் மூழ்கவிடாது தாங்கிப் பிடிக்க திருமால் தானே ஒரு கூர்மமாக அதாவது, ஆமை வடிவமெடுத்து மந்தர மலையை தம் முதுகில் தாமே ஏந்திக் கொண்டார். மலை கடலில் விழாமல் இருந்தது. இதனால் கடைவது எளிதாயிற்று. கடைந்து கொண்டிருந்த சமயத்தில், எல்லாவற்றிலும் முதலாக வந்து விஷம். விஷத்தைக் கண்டவுடன் நிறுத்தி விட்டனர். பிறகு, இந்திரன் வேண்டிக் கொள்ள சிவன் முன்வந்தார். வந்து அந்த விஷத்தை, கண்டத்தில் அருந்தித் தாங்கிக் கொண்டதால், அவரது கண்டம் நீலமாயிற்று. அதனாலேயே, அவர் நீலகண்டன் என்ற பெயரால் அழைக்கப் படுகிறார். விஷம் நீங்கிய மகிழ்வோடு, மேலும் கடைய ஆரம்பித்தனர். இதற்குப் பிறகு தான் பலப்பல பொருட்கள் கடலிலிருந்து ஒவ்வொன்றாக வெளிப்பட்டு வந்தன. முதலில் காமதேனு என்ற பசு வர அதைத் தொடர்ந்து உசஸ்வரஸ் என்ற பொன்மய குதிரை, உயர்ந்த ஐராவதம் என்னும் யானை நான்கு தந்தங்களோடு வந்தன அவற்றின் பின் கற்பகம், சந்தனம், பாரிஜாத தருக்கள், அப்ஸரஸ்கள் கன்னிகைகள், ஸ்ரீ லக்ஷ்மி பிராட்டியோடு, சந்திரன் சிந்தாமணி யாவும் தோன்றி எழுந்தன. கடைசியில் தன்வந்திரி வெளித்தோன்றி அமிர்த கலசத்தை ஏந்திவந்தார். அசுரர்கள் கைக்கு போகாமல் தேவர்களுக்கே இந்த அமிர்தத்தை கிடைக்க வழி செய்தார். ஆழ்வாரின் பாசுரத்தில், அனைத்து செயல்களும் திருமால் ஒருவனே செய்ததாக தெரிவிக்கின்றார்..பாருங்கள்..

*மாயிருங்குன்றம் ஒன்று மத்தாக,*

*மாசுணம் அதனொடு அளாவி,*

*பாயிரும் பௌவம் பகடு விண்டலற*

*படுதிரை விசும்பிடைப் படர,*

*சேயிரு விசும்பும் திங்களும் சுடரும்,*

*தேவரும் தாமுடன் திசைப்ப,*

*ஆயிரந்தோளால் அலைகடல் கடைந்தான்*

*அரங்க மாநகர் அமர்ந்தானே!* (பெரிய திருமொழி 5 ~7~4)

அது மட்டுமல்ல... திருமங்கையாழ்வார் தமது இன்னோர் பதிகத்தில், இனிய ஈரச்சொற்களால் கூறுவது எப்படி தெரியுமா..?

*மலங்கு விலங்கு நெடுவெள்ளம் மறுக, அங்கோர் வரைநட்டு,*

*இலங்குசோதி ஆரமுதம் எய்தும் அளவோர் ஆமையாய்*

*விலங்கல் திரிய தடம் கடலுள் சுமந்து திரிந்த வித்தகனை,*

*கலங்கல் முந்நீர் கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே*

(பெரிய திருமொழி 8 ~ 8 ~2)

தேவர்கள் மற்றும் அசுரர்கள் உள்ளிருந்து தானே கடைவதால், ஆயிரம் தோளால் அலைகடல் கடைந்தான் ஏன்பது ஆழ்வாரின் வரிகள். கடையும் போது தாங்க முடியா வலியையும் தாங்கி, ஒப்பற்ற பொருட்களை வெளியே கொண்டு வர உதவியது வலிமையான முதுகு கொண்ட ஸ்ரீகூர்மவதாரம் திருமால் எடுத்ததாலேயே!. திருமாலின் இந்த அவதாரம் தேவர்களுக்கு ஞானம், ஐஸ்வர்யம், சாந்தம், வலிமை, வீரம் யாவும் உதவியதால், எல்லோருக்கும் நன்மை அளிக்கும் என்பது நிச்சயம். இந்த அவதாரம், ஆனி மாதத்து க்ருஷ்ண பக்ஷத்தில் துவாதசியில் நிகழ்ந்ததாக புராணங்கள் கூறுகின்றன. அதனால், அன்றைய தினம், **ஸ்ரீகூர்ம ஜயந்தியாக** விசேஷமாக சம்பிரதாயத்தில் கொண்டாடப்படுகின்றது என்றும் நாம் அறிகின்றோம். திருமால் ஸ்ரீகூர்மவதாரம் எடுத்த இந்தப் புனித நன்னாளில், அவதாரப் பெருமைகளை தெரிந்து கொண்டோம். இந்த அவதார விஷயங்களை ஸ்வாமி தேசிகன் பரக்கப் பேசும் கவிதை வரிகளால் இனி அந்வயித்து மகிழ்வோமா...?

## தசாவதார ஸ்தோத்ரம்:

ஸ்வாமி தேசிகன் இயற்றிய 28 ஸ்தோத்ர க்ரந்தங்களுள் ஒன்று தசாவதார ஸ்தோத்ரம் ஆகும். இந்த ஸ்தோத்ரத்தில், ஸ்ரீரங்கநாதனே அனைத்து அவதார ரூபியென்று கூறுகின்றார். அவர் பத்து தனித்தனி ஸ்லோகங்கள் மூலமாக, பத்து அவதாரங்களை, அவற்றின் பெருமைகளை தனித்தனியாக பாடுகின்றார். முதல் ஸ்லோகம் ஸ்ரீரங்கநாதனே அனைத்தும் என்று சொல்லிப் பிறகு ஒவ்வொரு அவதாரத்திற்கும் ஒவ்வொரு பாசுரமாக வரிசைப்படுத்தி, அடுத்ததில் பத்து அவதார விசேஷங்களையும் கூறிவிட்டு, 13வது ஸ்லோகத்தில் பலச்ருதி சொல்லி தலைக் கட்டுகின்றார். இத்தகைய அருமையான ஸ்தோத்ரத்தில், மூன்றாவது ஸ்லோகமாக, ஸ்ரீகூர்மவதாரம் சிறப்பை ஸ்வாமி தேசிகன் பின்வருமாறு விஸ்தாரம் செய்கின்றார்.

*அவ்யாஸூர் புவநத்ரயீ மணிப்ருதம்*

*கண்டூயநை ரத்ரிணா*

*நித்ராணஸ்ய பரஸ்ய கூர்மவபுஷோ*

*நிஸ்வாஸ்ய வாதோர்மயா*

*யத்விக்ஷேபண சம்ஸ்க்ரு தோததிபய:*

*ப்ரேங்கோள பர்யங்கிகா*

*நித்யாரோஹண நிர்வ்ருதோ விஹரதே*

*தேவ சஹைவ ஸ்ரிய*

இந்த ஸ்லோகத்தில் ஸ்வாமி தேசிகன் கற்பனையும், அவதார விசேஷமான பெருமையையும் வெளிப்படுத்துகின்றார். மந்தர மலையை தன் முதுகில் ஆமையாகி தூக்கி வைத்து, அது பாற்கடலை தேவ அசுரர்கள் ஆளுக்கோரு பக்கம் இழுத்து கடைகையில் முதுகு சொரிந்து விடுவது போலவும், அது இதமாக இருப்பதால், பெருமாள் தூங்கிய படி வலிகளை தாங்கி, அவதாரத்தை மிகவும் எளிதாக, கச்சிதமாக ஏற்றுக் கொண்ட திருமாலாகவே பார்க்கின்றார். மலை தன் முதுகு மீது அழுந்தி ஆட்டவைத்து சொரிந்து கொண்டதால், கூர்ம அவதாரம் எடுத்துள்ள எம்பெருமான் விடும் மூச்சுக்காற்று கடைகின்ற கடலின் நீர் அசைவையும், எழுச்சியையும் ஏற்படுத்துகின்றது. அந்த ஆசையில் தான் விரும்பும் கடலாகிய பாற்கடலையே இருப்பிடமாக்கி எப்போதும் பிராட்டியோடு இன்பம் கொள்கின்றான். அவனே இந்த மூன்று லோகத்தையும் காத்து ரக்ஷிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கின்றார். கடைவது தனது முதுகை வருடி சொரிந்து விட மந்தர மலையின் அழுத்தமோ, அதன் வலியோ அறியாது, பெருமாள் தன்னை இதமாக தூங்க வைக்கும் கருவியாக்கி கொள்கின்றான் என்கின்றார். அதுதான் கவிசிம்மனின் கற்பனை மற்றும் கவிநயம். இதைப்போலவே 12ம் ஸ்லோகத்தில் பத்து அவதாரங்களின் சிறப்பு விசேஷத் தன்மையாக ஒவ்வொரு அவதாரத்திற்கும் அடைமொழி கொடுத்து இரசிக்கின்றார். அந்த வகையில், கூர்மாவதாரத்தை **விஹார கச்சப** எனச் சொல்கின்றார். அதாவது, பெரிய மந்த்ர மலையைக் கூட அநாயசமாய் தன் முதுகில் ஏற்றிக் கொண்டு, மத்தாக்கி கடலைக் கடைவதை விளையாட்டாக புரிந்த ஆமையாய் அவதரித்தவனே என்று போற்றுகின்றார். பெருமாளுக்கு எல்லாமே விளையாட்டு தான் என்பதை கவிநயமும்.காட்டுகின்றது அல்லவா..? அடுத்து, தேசிகப் பிரபந்தத்தில் தமிழோடு கூர்ம அவதாரத்தைகா குறிக்கும்

விதமாபார்க்கலாம்.

## ஸ்ரீ நவமணிமாலையில் தசாவதாரம்:

ஸ்வாமி தேசிகனின் தமிழ்ப் பிரபந்தங்கள் யாவுமே பிரசித்தி பெற்றவை ஆகும். அவற்றுள் நவமணிமாலை தேசிகனின் நமிழ் இலக்கண, இலக்கிய, கவிதை திறங்களுக்கு அத்தாட்சியாகக் காட்டக் கூடியத் தொகுப்பு. இந்தத் தொகுப்பை ஆயிந்தை நகரில் இருந்து அருளாட்சி புரிகின்ற தேவப்பெருமாளுக்கு சமர்ப்பணம் செய்கின்றார். பாசுரங் ஒவ்வொன்றிலும் அடியவர்க்கு மெய்யன் என்றும் கொண்டாடுகின்றார். இலக்கண இலக்கிய மேன்மை சொல்லும் வண்ணம் இதிலுள்ள பாக்களில் ஒன்று, பதினாறுசீர்களும், இன்னொன்று, இருபத்தெட்டு சீர்களை உடைய ஆசிரியப் பாக்களாக வடிவமைத்தது ஆகும். தமிழ்க் கவிதைகளில் எட்டு மற்றும் பண்ணிரண்டு வரை சீர்கள் வைத்த பாக்களை விஞ்சும் படி பதினாறு, இருபத்தெட்டு வரை சென்று இயற்றியது அவரது தமிழப் புலமைக்கும் ஓர் எடுத்துக்காட்டு ஆகும். அப்பேர்ப்பட்ட இருபத்தெண் சீராசிரியச் சந்த விருத்தத்தில், தசாவதார சிறப்புகளை அடுக்கி, நவமணி மாலையில், இரண்டாம் பாசுரமாக, அவற்றை அடியவர்க்கு மெய்யனான அயிந்தை நகர் தேவப்பெருமாளுக்கு சேர்ப்பிக்கின்றார். ஒரே வரி ஒரு அவதாரம் என்னும் விதமாக, அதன் சிறப்புத் தன்மையை அந்தந்த வரிகளால் கோடிட்டு காட்டுகின்றார்.

*மகரம் வளரும் அளவில் பௌவம் அடைய உற்று அலைத்தனை*

*வடிவுகமடம் என அமர்ந்து கிரிதனைத் தரித்தனை*

*மலியும் அசுரன் உரமிடந்து வசுதையைப் பெயர்த்தனை*

*வலிகொள் அவுணன் உடல்பிளந்து மதலை மெய்க்குதித்தனை*

..............

*அவனி மருவு திருவயிந்தை அடியவர்க்கு மெய்யனே!*

கமடம் என்பது ஆமையைக் குறிக்கும் பதம். அதையே வடிவாக கடலுக்கு அடியில் அமர்ந்து கொண்டு, தன் மேல் தானே மந்தர மலையை ஏற்றி, அதை கடலுக்குள் விழுந்து விடாது தரித்து தேவர்களுக்கு சகாயம் செய்ய அலைகடலைக் கடைந்து அமிர்தத்தை அவர்களுக்கே தந்தருளியவனே என திருவயிந்தை நகர் தெய்வ நாயகனே என விளித்து போற்றும் பாசுரவரியாகும்.

## தேசிகன் பார்வையில் ஸ்ரீகூர்மாவதாரம்:

மேற்சொன்ன ஸ்தோத்ரங்கள், தமிழ்ப் பிரபந்த பாசுரங்கள் வாயிலாக, ஸ்வாமி தேசிகன் ஸ்ரீகூர்மவதாரம் திருமால் எடுத்ததும், தேவர்களை அமிர்தம் கொண்டு அருளியது எல்லாம் லீலைகளே! ஒரு விளையாட்டே என்கின்றார். வலிமையான ஓர் மலையை தாங்கிக் கொண்ட ஆமைக்கு கடையும் போது மலை ஏற்படுத்தும் அசைவு சொரிந்து கொள்ளும் விதமாக இருந்ததால் அதைத் தூங்கிய நிலையிலேயே சாதித்து விட்டார் எனக் கவிநயத்தோடு கூறுவதால் புரிகின்றது. தமிழ்ப் பிரபந்தத்தில் அந்த மலையை கடலுக்கு அடியில் அமர்ந்து கொண்டு மலையை தன்மீது தானே தரித்துக் கொண்டு செய்ய வேண்டிய செயலும் சிறப்பாக நிறைவேற்றியது அயிந்தை நகர் அடியவர்க்கு மெய்யனாம் தெய்வ நாயகன் விளையாட்டு என முடிக்கின்றார்

## முடிவுரை:

இந்த வியாஸம் அடியேன் அறிந்து தெரிந்து கொண்ட விஷயங்களை கட்டுரைகள் வாயிலாக படித்ததே! அதையே, தமிழ் கொண்டு பகிரவே எண்ணி முயற்சி செய்தேன். தவறுகளிருப்பின் அடியேன் சிற்றறிவே காரணம். பொருளிருப்பின், அது ஆசார்யன் வழித்துணையே! வருகின்ற **ஸ்ரீகூர்ம ஜயந்தி** புனித நாளில், திருமாலின் சிறப்பான அவதார தினமாகக் கொண்டு அவனைப் போற்றித் துதித்தால், நல்ல ஞானம், பலம், ஐஸ்வர்யம், சக்தி, சாந்தம் அனைத்தும் கொடுத்து நமக்கு வாழ்வளிப்பான்! அடியேனும் ஓரிரு வார்த்தைகள் இந்த அவதாரம் பற்றி எழுத முடிந்தது, அந்தத் திருமால் கருணையும், ஆசார்ய பேரருளும் கிடைத்ததாலேயே! அவர்கள் திருவடிகளில் பணிந்து வணங்குகின்றேன்...



# 5. Three Main Temples Where Lord Vishnu Is Worshipped as Kurma Avatar

We all know about the 9 incarnations of Lord Vishnu and the stories associated with them. Have you ever thought of the temples associated with them? Yes, in this blog, we are going to know about some of the unknown and rare temples that are related to one of the incarnations of Lord Vishnu – **Kurma Avatar** (2nd incarnation of Lord Vishnu in the Form of Tortoise).
Like any other avatars of Vishnu, Kurma Avatar was also taken at a time of crisis to restore the **cosmic equilibrium**. Once, the gods and demons churned the ocean of Milk (Parkadal) in order to get the Nectar of Immortality (Amruth). To churn the ocean of Milk, they used the Mount Mandara as the churning staff and the serpent Vasuki as the churning rope. While the Samudra Manthan (churning) was happening, the mount Mandhara (which was used as a churning staff) got stuck and it couldn't move. Hence, Lord Vishnu transfigured as a tortoise and went into the ocean to give **support** to **Mount Mandara**.
Though we have come across numerous temples of Lord Vishnu depicting His various incarnations or avatars, Kurma Avatar of Lord Vishnu is a unique one and there are a very few temples in the world, where Lord Vishnu is worshipped in the form of the tortoise.

These are the **only 3 main temples** in India where Lord Vishnu is worshipped in the form of Kurma Avatar. They are,

- Sri Kurmam Temple, Srikakulam, Andra Pradesh
- Sri Gavi Ranganatha Swamy Temple, Chitradurga, Karnataka
- Sri Kurma Varadharaja Swamy Temple, Chittor, Andra Pradesh

## Sri Kurmam Temple – Srikakulam

**Sri Kurmam or Kurmanadha Temple** is in Srikakulam area situated on the shores of Bay of Bengal and this is one of the few temples of Lord Vishnu in the form of **Kurma Avatar** (ie.) in the form of **Tortoise**. It is the one and only **Suyambu** or Self-Manifested temple in the world where Lord Vishnu is adored in the form of Kurma.



As per the **Sthala Purana**, it is said that during the Krutha Yuga, a Pious King Named **Swetha Maharaj** did a fierce penance for many years. Being pleased by his penance, Lord Vishnu appeared/ manifested here in the form of Kurma Avatar. It is also believed that **Lord Brahmma**, the creator, performed the holy rituals by Himself and sanctified or purified the

Holy Shrine of Kurma with **Gopaala Yantra.** It is said that the Holy Lake named "**Swetha Pushkarini**" that is found in front of the temple is formed by the **Sudarshana Chakra**. Goddess **Mahalakshmi** originated from this in the form of Varada Mudra posture – Seated on the Garuda Vaahana and she is known by the name **Sri Kurmai Nayaki.**



The main idol of Lord Kurmam is a big **Saligrama** and is known as "**Sampradayam**". The image is not a sculpture that is crafted by man, but it is the **fossil** of an actual (large-size) turtle. The temple tower is called the **Padmavimana**. Unlike the other Vishnu Temples, the main deity is facing **West** and so there are **2 Dwajasthambas**, one facing East and the other facing West. This temple is also known for its marvellous sculptors and wealthy art designs.



There are almost **210 pillars** in the Sri Kurmam temple and each of the pillars has its own identity. Moreover, this temple is believed to be the **Moksha Sthala** since the bath in Swetha Pushkarni would wash away all the sins. Apart from Kashmir, this temple also has a special shrine for **Vaishno Devi**. Other deities found in this temple are Kala Bhairava, Venugopala Swamy, Vyasa Maharshi, Sri Maha Lakshmi and Durga Devi.

## Sri Gavi Ranganatha Swamy Temple – Chitradurga

**Gavi Ranganathaswamy** Temple is the second temple where Lord Vishnu manifests Himself as Kurma Avatara. The temple is located at a place called **Gavi Rangapura,** located some 28kms from **Hosadurga Town** in Chitradurga Dist., Karnataka. The temple is actually a **Cave Temple** and so the Lord is known by the name "Gavi Ranganathaswamy" (In Kannada **Gavi means Cave** )!



In the main Sanctum, the Lord graces His devotees in the form of Kurma Avatar (Tortoise). The temple is built on the top of the hill and the Garbagraha is in the form of a cave. The beautiful idol of Lord Vishnu in the form of a **giant tortoise** is found on the floor, at the center of the cave. **Silver eyes** have been fixed on the eye sockets of the Tortoise. Lord Vishnu's signature **Naama** (Thirunaamam) has been placed on the **forehead**, and a silver **conch and chakra** are kept on the left and the right side respectively.



This temple can either be reached by roadways or by granite steps that go up the hills till the main temple. At the lower level of the temple complex, one could see a separate shrine dedicated to **Goddess Udhbava Lakshmi** (the consort of Lord Vishnu). We could also see separate shrines for Lord Anjaneya, Lord Ganesha, and Lord Anantha Padmanabha Swamy at different levels on the same hill. Unlike other Vishnu temples, the idol is always covered with garlands of marigold, jasmine, chrysanthemum and tulsi leaves. After the Arti/Pooja is performed, the **curd** is given as **theertha Prasadam** to the devotees.

## Sri Kurma Varadharaja Swamy Temple – Chittoor

The next temple that has Lord Vishnu in the form of Kurma Avatar is **Sri Kurma Varadharaja Swamy** Temple, **Chittoor**. The temple is located on the Palamaner Road, Chittoor Dist., Andra Pradesh. As the name of the temple suggests, Lord Vishnu graces His devotees in the form of a **Tortoise** with His consort **Goddess Bhoodevi.** The temple is located on the banks of the sacred **river Koudinya**.

As per the legends, during the period of **1790's** the Rayalaseema region was under the **rule of Muhammads.** Due to religious differences among the people, most of the prominent temples were demolished by the Muslim rulers. By knowing the situation, the former Kurmai villagers demolished the Outer Prahara (fencing around the temple) themselves and then covered the whole temple (which is nearly 250 sq km) with sand, in order to **save the Temple** from desecration by the gang of Muhammad rulers. It is believed that Sri Varadaraja Swamy has **left the temple** to Kancheepuram (Kanchi) and while leaving this place for Kanchipuram, He made His footprints on the stone called **Kodhevarabanda.**



Nearly **150 years** back, one day a Kannada person belonging to the Kurmai village visited that place and he was examining the sand hills. At that time, he accidentally noticed the gopuram of Kurma Varadaraja Swamy temple. With the help of Kurmai villagers, he cleared all the sand and started **rebuilding** the temple. The main function that was celebrated in this temple is the **Rathotsavam** where the Lord Varadaraja Swamy along with His consort **Goddess Boodhevi** is taken around the streets of the village in the **Ratham** (Chariot).

Courtesy:: https://gosthala.com/only-3-main-temples-where-lord-vishnu-is-worshiped-as-kurma-avatar/



# 6.कूर्मस्तुतिः 1

निरवधि च निराश्रयं च यस्य स्थितमनिवर्तितकौतुकप्रपञ्चम् ।
प्रथम इह भवान्स कूर्ममूर्तिर्जयति चतुर्दशलोकवल्लिकन्दः ॥ १॥
भ्राम्यन्महागिरिनिघर्षणलब्धपृष्ठ-कण्डूयनक्षणसुखायितगाढनिद्रः ।
सुष्वाप दीर्घतरघर्घरघोरघोषःश्वासाभिभूतजलधेः कमठः स वोऽव्यात्॥ २
नमस्कुर्मः कूर्मं नमदमरकोटीरनिकर-
प्रसर्पन्माणिक्यच्छविमिलितमाञ्जिष्ठवपुषम् ।
जरीजृम्भड्डिम्भद्युमणिरमणीयांशुलहरी-
परीरम्भस्फूर्जद्वलभिदुपलाद्रिप्रतिभटम् ॥ ३॥
निष्प्रत्यूहमनल्पकल्पचरितस्त्रैलोक्यरक्षागुरुः
क्रीडाकूर्मकलेबरः स भगवान्दिश्यादमन्दां मुदम् ।
कल्पान्तोदधिमध्यमज्जनवशाद्व्यासर्पतः संलुठत्
पृष्ठे यस्य बभूव सैकतकणच्छायं धरित्रीतलम् ॥ ४॥

इति कूर्मस्तुतिः २ समाप्ता ।



# 7. कूर्मस्तुतिः 2

नमस्कुर्मः कूर्मं नमदमरकोटीरनिकर-
प्रसर्पन्माणिक्यच्छविमिलितमाञ्जिष्ठवपुषम् ।
जरीजृम्भद्बिम्भद्युमणिरमणीयांशुलहरी-
परीरम्भस्फूर्जद्वलभिदुपलाद्रिप्रतिभटम् ॥ १॥

पृष्ठे भ्राम्यदमन्दमन्दरगिरिग्रावाग्रकण्डूयनैः
निद्रालोः कमठाकृतेर्भगवतः श्वासानिलाः पान्तु वः ।
यत्संस्कारकलानुवर्तनवशाद्वेलाच्छलेनाम्भसां
यातायातमतन्द्रितं जलनिधिर्नाद्यापि विश्राम्यति ॥ २॥

दृग्भ्यां यस्य विलोकनाय जगतो द्रागीषदुत्तोलित-
ग्रीवाग्रोपरिविस्फुरद्ग्रहगणे छत्रायितायां भुवि ।
हा धिग्भूः किमभूदभूत्तदितरत्किं चेति पर्याकुलो
हन्यादेव हठादघानि कमठाधीशः कठोराणि वः ॥ ३॥

यो धत्ते शेषनागं तमनु वसुमतीं स्वर्गपातालयुक्तां
युक्तां सर्वैः समुद्रैर्हिमगिरिकनकप्रस्थमुख्यैर्नगेन्द्रैः ।
एतद्ब्रह्माण्डमव्याकृतघटसदृशं भाति वंशेऽसुरारेः
पायाद्वः कूर्मदेहः प्रकटितमहिमा माधवः कामरूपी ॥ ४॥

इति कूर्मस्तुतिः समाप्ता ।

# 8. कूर्मस्तोत्रम्

देवा ऊचुः ॥

नमाम ते देव पदारविन्दं प्रपन्नतापोपशमातपत्रम् ।
यन्मूलकेता यतयोऽञ्जसोरुसंसारदुःखं बहिरुत्क्षिपन्ति ॥ १॥
धातर्यदस्मिन्भव ईश जीवास्तापत्रयेणोपहता न शर्म ।
आत्मँलभन्ते भगवंस्तवाङ्घ्रिच्छायां सविद्यामत आश्रयेम ॥ २॥
मार्गन्ति यत्ते मुखपद्मनीडैश्छन्दःसुपर्णैरृषयो विविक्ते ।
यस्याघमर्षोदसरिद्वरायाः पदं पदं तीर्थपदः प्रपन्नाः ॥ ३॥
यच्छ्रद्धया श्रुतवत्यां च भक्त्या संमृज्यमाने हृदयेऽवधाय ।
ज्ञानेन वैराग्यबलेन धीरा व्रजेम तत्तेऽङ्घ्रिसरोजपीठम् ॥ ४॥
विश्वस्य जन्मस्थितिसंयमार्थे कृतावतारस्य पदाम्बुजं ते ।
व्रजेम सर्वे शरणं यदीश स्मृतं प्रयच्छत्यभयं स्वपुंसाम् ॥ ५॥
यत्सानुबन्धेऽसति देहगेहे ममाहमित्यूढदुराग्रहाणाम् ।
पुंसां सुदूरं वसतोऽपि पुर्यां भजेम तत्ते भगवन्पदाब्जम् ॥ ६॥
तान्वा असद्वृत्तिभिरक्षिभिर्ये पराहृतान्तर्मनसः परेश ।
अथो न पश्यन्त्युरुगाय नूनं ये ते पदन्यासविलासलक्ष्म्याः ॥ ७॥
पानेन ते देव कथासुधायाः प्रवृद्धभक्त्या विशदाशया ये ।
वैराग्यसारं प्रतिलभ्य बोधं यथाञ्जसान्वीयुरकुण्ठधिष्ण्यम् ॥ ८॥
तथापरे चात्मसमाधियोगबलेन जित्वा प्रकृतिं बलिष्ठाम् ।
त्वामेव धीराः पुरुषं विशन्ति तेषां श्रमः स्यान्न तु सेवया ते ॥ ९॥

तत्ते वयं लोकसिसृक्षयाद्य त्वयानुसृष्टास्त्रिभिरात्मभिः स्म ।
सर्वे वियुक्ताः स्वविहारतन्त्रं न शक्नुमस्तत्प्रतिहर्तवे ते ॥ १०॥
यावद्बलिं तेऽज हराम काले यथा वयं चान्नमदाम यत्र ।
यथोभयेषां त इमे हि लोका बलिं हरन्तोऽन्नमदन्त्यनूहाः ॥ ११॥
त्वं नः सुराणामसि सान्वयानां कूटस्थ आद्यः पुरुषः पुराणः ।
त्वं देवशक्त्यां गुणकर्मयोनौ रेतस्त्वजायां कविमादधेऽजः ॥ १२॥
ततो वयं सत्प्रमुखा यदर्थे बभूविमात्मन्करवाम किं ते ।
त्वं नः स्वचक्षुः परिदेहि शक्त्या देवक्रियार्थे यदनुग्रहाणाम् ॥ १३॥

इति श्रीमद्भागवतपुराणान्तर्गतं कूर्मस्तोत्रं समाप्तम् ॥



# 9. मुनिभिः कृतं कूर्मस्तोत्रम्

सूत उवाच ।

एतावदुक्त्वा भगवान् विरराम जनार्दनः ।
तुष्टुवुर्मुनयो विष्णुं शक्रेण सह माधवम् ॥ १॥

मुनयः ऊचुः ।

नमस्ते कूर्मरूपाय विष्णवे परमात्मने ।
नारायणाय विश्वाय वासुदेवाय ते नमः ॥ २॥
नमो नमस्ते कृष्णाय गोविन्दाय नमो नमः ।
माधवाय नमस्तुभ्यं नमो यज्ञेश्वराय च ॥ ३॥
सहस्रशिरसे तुभ्यं सहस्राक्षाय ते नमः ।
नमः सहस्रहस्ताय सहस्रचरणाय च ॥ ४॥
ॐ नमो ज्ञानरूपाय परमात्मस्वरूपिणे ।
आनन्दाय नमस्तुभ्यं मायातीताय ते नमः ॥ ५॥
नमो गूढशरीराय निर्गुणाय नमोऽस्तु ते ।
पुरुषाय पुराणाय सत्तामात्रस्वरूपिणे ॥ ६॥
नमः साङ्ख्याय योगाय केवलाय नमोऽस्तु ते ।
धर्मज्ञानाधिगम्याय निष्कलाय नमोऽस्तु ते ॥ ७॥
नमस्ते व्योमरूपाय महायोगेश्वराय च ।
परावराणां प्रभवे वेदवेद्याय ते नमः ॥ ८॥

नमो बुद्धाय शुद्धाय नमो युक्ताय हेतवे ।
नमो नमो नमस्तुभ्यं मायिने वेधसे नमः ॥ ९॥
नमोऽस्तु ते वराहाय नारसिंहाय ते नमः ।
वामनाय नमस्तुभ्यं हृषीकेशाय ते नमः ॥ १०॥
स्वर्गापवर्गदात्रे च नमोऽप्रतिहतात्मने ।
नमो योगाधिगम्याय योगिने योगदायिने ॥ ११॥
देवानां पतये तुभ्यं देवार्त्तिशमनाय ते ।
भगवंस्त्वत्प्रसादेन सर्वसंसारनाशनम् ॥ १२॥
अस्माभिर्विदितं ज्ञानं यज्ज्ञात्वामृतमश्नुते ।
श्रुतास्तु विविधा धर्मा वंशा मन्वन्तराणि च ॥ १३॥
सर्गश्च प्रतिसर्गश्च ब्रह्माण्डस्यास्य विस्तरः ।
त्वं हि सर्वजगत्साक्षी विश्वो नारायणः परः ॥ १४॥
त्रातुमर्हस्यनन्तात्मा त्वामेव शरणं गताः ।

इति कूर्मपुराणे उत्तरभागे षट्चत्वारिंशाध्यायान्तर्गतं
मुनिभिः कृतं कूर्मस्तोत्रं समाप्तम् ।

कूर्मपुराणे उत्तरभागे ४६/५३-६६

## ॥ श्रीकूर्म चतुष्कं – श्रीमद्देवी भागवतम् ॥

श्रीनारायण उवाच –

हिरण्मये नाम वर्षे भगवान् कूर्म-रूप-धृक् ।
आस्ते योगपतिः सोऽयं अर्यम्णा पूज्य ईड्यते ॥

अर्यमोवाच –

ॐ नमो भगवते अकूपाराय सर्व-सत्त्व-गुण-विशेषणाय नोपलक्षितस्थनाय नमो वर्ष्मणे नमो धूम्ने नमोऽवस्थानाय नमस्ते ॥ १ ॥

यद्रूपं एतन् निजमायया‌ऽर्पितं
अर्थ-स्वरूपं बहु-रूप-रूपितम् ।
सङ्ख्या न यस्यास्त्य यथोपलंभनात्
तस्मै नमस्ते ऽव्यपदेश-रूपिणे ॥ २ ॥

जरायुजं स्वेदजं अण्डजोद्भिदं
चराचरं देवर्षि-पितृ-भूतमैन्द्रियम् ।
द्यौः खं क्षितिः शैल-सरित्-समुद्रं
द्वीप ग्रहर्क्षेत्यभिधेय एकः ॥ ३ ॥

यस्मिन् असङ्ख्येय विशेष नाम
रूपाकृतौ कविभिः कल्पितेयम् ।
सङ्ख्या यया तत्त्व दृशाऽपनीयते
तस्मै नमः साङ्ख्य-निदर्शनाय ते ॥ ४ ॥

एवं स्तुवति देवेशं अर्यमा सह वर्षपैः ।
गीयते चापि भजते सर्व-भूत-भवं प्रभुम् ॥ ५ ॥

---

॥ इति श्रीमद्देवी भागवते महापुराणे अष्टम-स्कन्धे
दशमोऽध्याये श्रीकूर्म चतुष्कं सम्पूर्णम् ॥

# 11.ककारादि श्रीकूर्माष्टोत्तरशतनामस्तोत्रम्

श्री हयग्रीवाय नमः ।हरिः ॐ

कमठः कन्धिमध्यस्थः करुणावरुणालयः ।
कुलाचलसमुद्धर्ता कुण्डलीन्द्रसमाश्रयः ॥ १॥
कठोरपृष्टः कुधरः कलुषीकृतसागरः ।
कल्याणमूर्तिः क्रतुभुक्प्रार्थनाधृत विग्रहः ॥ २॥
कुलाचलसमुद्भ्रान्तिघृष्टकण्डूतिसौख्यवान् ।
करालश्वाससङ्क्षुब्धसिन्धूर्मिप्रहताम्बरः ॥ ३॥
कन्धिकर्दमकस्तूरीलिप्तवक्षःस्थलः कृती ।
कुलीरादिपयस्सत्त्वनिष्पेषणचतुष्पदः ॥ ४॥
कराग्रादत्तसम्भुक्ततिमिङ्गिलगिलोत्करः ।
कन्धिपुष्पद्विरेफाभः कपर्द्यादिसमीडितः ॥ ५॥
कल्याणाचलतुङ्गात्मागाधीकृतपयोनिधिः ।
कुलिशत्पृष्ठसङ्घर्षक्षीणमूलकुलाचलः ॥ ६॥
काश्यपीसत्कुचप्रायमन्दराहतपृष्ठकः ।
कायैकदेशापर्याप्तशेषदिग्गजमण्डलः ॥ ७॥
कठोरचरणाघातद्वैधीकृतपयोनिधिः ।

कालकूटकृतत्रासः काण्डदुर्मितवैभवः ॥ ८॥
कमनीयः कविस्तुत्यः कनिधिः कमलापतिः ।
कमलासनकल्याणसन्धाता कलिनाशनः ॥ ९॥
कटाक्षक्षतदेवार्तिः केन्द्रादिविधृतांजलिः ।
कालीपतिप्रीतिपात्रं कामितार्थप्रदः कविः ॥ १०॥
कूटस्थः कूटकमठः कूटयोगिसुदुर्लभः ।
कामहीनः कामहेतुः कामभृत्कंजलोचनः ॥ ११॥
क्रतुभुग्दैन्यविध्वंसी क्रतुभुक्पालकः क्रतुः ।
क्रतुपूज्यः क्रतुनिधिः क्रतुत्राता क्रतूद्भवः ॥ १२॥
कैवल्यसौख्यदकथः कैशोरोत्क्षिप्तमन्दरः ।
कैवल्यनिर्वाणमयः कैटभप्रतिसूदनः ॥ १३॥
क्रान्तसर्वाम्बुधिः क्रान्तपातालः कोमलोदरः ।
कन्धिसोर्मिजलक्षौमः कुलाचलकचोत्करः ॥ १४॥
कटुनिश्श्वासनिर्धूतरक्षस्तूलः कृताद्भुतः ।
कौमोदकीहतामित्रः कौतुकाकविताहवः ॥ १५॥
करालिकंटकोद्धर्ता कविताब्धिमणीसुमः ।
कैवल्यवल्लरीकन्दः कन्दुकीकृतचन्दिरः ॥ १६॥
करपीतसमस्ताब्धिः कायान्तर्गतवाश्वरः ।

कर्पराब्जद्विरेफाभमन्दरः कन्दलत्स्मितः ॥ १७॥
काश्यपीव्रततीकन्दः कश्यपादिसमानतः ।
कल्याणजालनिलयः क्रतुभुङ्नेत्रनन्दनः ॥ १८॥
कबन्धचरहर्यक्षः क्रान्तदर्शिमनोहरः ।
कर्मठाविषयः कर्मकर्तृभावादिवर्जितः ॥ १९॥
कर्मानधीनः कर्मज्ञः कर्मपः कर्मचोदनः ।
कर्मसाक्षी कर्महेतुः कर्मज्ञानविभागकृत् ॥ २०॥
कर्ता कारयिता कार्यं कारणं करणं कृतिः ।
कृत्स्नं कृत्स्नातिगः कृत्स्नचेतनः कृत्स्नमोहनः ॥ २१॥
करणागोचरः कालः कार्यकारणतातिगः ।
कालावशः कालपाशबद्धभक्तावनाभिधः ॥ २२॥
कृतकृत्यः केलिफलः कीर्तनीयः कृतोत्सवः ।
कृतेतरमहानन्दः कृतज्ञः कृतसत्सुखः ॥ २३॥

॥ इति ककारादि श्री कमठावताराष्टोत्तरशतम् रामेण
पराभव वैशाख बहुलद्वादश्यां लिखितम्
श्री हयग्रीवायार्पितम् ॥

# 12. ककारादि श्रीकूर्माष्टोत्तरशतनामावलिः

श्री हयग्रीवाय नमः । हरिः ॐ

ॐ कमठाय नमः ।

ॐ कन्धिमध्यस्थाय नमः ।

ॐ करुणावरुणालयाय नमः ।

ॐ कुलाचलसमुद्धर्त्रे नमः ।

ॐ कुण्डलीन्द्रसमाश्रयाय नमः ।

ॐ कठोरपृष्ठाय नमः ।

ॐ कुधराय नमः ।

ॐ कलुषीकृतसागराय नमः ।

ॐ कल्याणमूर्तये नमः ।

ॐ क्रतुभुक्प्रार्थनाधृत विग्रहाय नमः । १०

ॐ कुलाचलसमुद्भ्रान्तिघृष्टकण्डूतिसौख्यवते नमः ।

ॐ करालश्वाससङ्क्षुब्धसिन्धूर्मिप्रहताम्बराय नमः ।

ॐ कन्धिकर्दमकस्तूरीलिप्तवक्षस्थलाय नमः ।

ॐ कृतिने नमः ।

ॐ कुलीरादिपयस्सत्त्वनिष्पेषणचतुष्पदाय नमः ।

ॐ कराग्रादत्तसम्भुक्ततिमिङ्गिलगिलोत्कराय नमः ।

ॐ कन्धिपुष्पद्विरेफाभाय नमः ।

ॐ कपर्द्यादिसमीडिताय नमः ।

ॐ कल्याणाचलतुङ्गात्मगाधीकृतपयोनिधये नमः ।

ॐ कुलिशत्पृष्ठसङ्घर्षक्षीणमूलकुलाचलाय नमः । २०

ॐ काश्यपीसत्कुचप्रायमन्दराहतपृष्ठकाय नमः ।

ॐ कायैकदेशापर्याप्तशेषदिग्गजमण्डलाय नमः ।

ॐ कठोरचरणाघातद्वैधीकृतपयोनिधये नमः ।

ॐ कालकूटकृतत्रासाय नमः ।

ॐ काण्डदुर्मितवैभवाय नमः ।

ॐ कमनीयाय नमः ।

ॐ कविस्तुत्याय नमः ।

ॐ कनिधये नमः ।

ॐ कमलापतये नमः ।

ॐ कमलासनकल्याणसन्धात्रे नमः । ३०

ॐ कलिनाशनाय नमः ।

ॐ कटाक्षक्षतदेवार्तये नमः ।

ॐ केन्द्रादिविधृतांजलये नमः ।

ॐ कालीपतिप्रीतिपात्राय नमः ।

ॐ कामितार्धप्रदाय नमः ।

ॐ कवये नमः ।

ॐ कूटस्थाय नमः ।

ॐ कूटकमठाय नमः ।

ॐ कूटयोगिसुदुर्लभाय नमः ।

ॐ कामहीनाय नमः । ४०

ॐ कामहेतवे नमः ।

ॐ कामभृते नमः ।

ॐ कंजलोचनाय नमः ।

ॐ क्रतुभुग्दैन्यविध्वंसिने नमः ।

ॐ क्रतुभुक्पालकाय नमः ।

ॐ क्रतवे नमः ।

ॐ क्रतुपूज्याय नमः ।

ॐ क्रतुनिधये नमः ।

ॐ क्रतुत्रात्रे नमः ।

ॐ क्रतूद्भवाय नमः । ५०

ॐ कैवल्यसौख्यदकथाय नमः ।

ॐ कैशोरोत्क्षिप्तमन्दराय नमः ।

ॐ कैवल्यनिर्वाणमयाय नमः ।

ॐ कैटभप्रतिसूदनाय नमः ।

ॐ क्रान्तसर्वाम्बुधये नमः ।

ॐ क्रान्तपातालाय नमः ।

ॐ कोमलोदराय नमः ।

ॐ कन्धिसोर्मिजलक्षौमाय नमः ।

ॐ कुलाचलकचोत्कराय नमः ।

ॐ कटुनिश्श्वासनिर्धूतरक्षस्तूलाय नमः । ६०

ॐ कृताद्भुताय नमः ।

ॐ कौमोदकीहतामित्राय नमः ।

ॐ कौतुकाकलिताहवाय नमः ।

ॐ कराशिकंटकोद्धर्त्रे नमः ।

ॐ कविताब्धिमणीसुमाय नमः ।

ॐ कैवल्यवल्लरीकन्दाय नमः ।

ॐ कन्दुकीकृतचन्दिराय नमः ।

ॐ करपीतसमस्ताब्धये नमः ।

ॐ कायान्तर्गतवाश्वराय नमः ।

ॐ कर्पराब्जद्विरेफाभमन्दराय नमः । ७०

ॐ कन्दलत्स्मिताय नमः ।

ॐ काश्यपीव्रततीकन्दाय नमः ।

ॐ कश्यपादिसमानताय नमः ।

ॐ कल्याणजालनिलयाय नमः ।

ॐ क्रतुभुङ्नेत्रनन्दनाय नमः ।

ॐ कबन्धचरहर्यक्षाय नमः ।

ॐ क्रान्तदर्शिमनोहराय नमः ।

ॐ कर्मठाविषयाय नमः ।

ॐ कर्मकर्तृभावादिवर्जिताय नमः ।

ॐ कर्मानधीनाय नमः । ८०

ॐ कर्मज्ञाय नमः ।

ॐ कर्मपाय नमः ।

ॐ कर्मचोदनाय नमः ।

ॐ कर्मसाक्षिणे नमः ।

ॐ कर्महेतने नमः ।

ॐ कर्मज्ञानविभागकृते नमः ।

ॐ कर्त्रे नमः ।

ॐ कारयित्रे नमः ।

ॐ कार्याय नमः ।

ॐ कारणाय नमः ।

ॐ करणाय नमः ।

ॐ कृतये नमः ।

ॐ कृत्स्नाय नमः ।

ॐ कृत्स्नातिगाय नमः ।

ॐ कृत्स्नचेतनाय नमः ।

ॐ कृत्स्नमोहनाय नमः ।

ॐ करणागोचराय नमः ।

ॐ कालाय नमः ।

ॐ कार्यकारणतातिगाय नमः ।

ॐ कालावशाय नमः । १००

ॐ कालपाशबद्धभक्तावनाभिधाय नमः ।

ॐ कृतकृत्याय नमः ।

ॐ केलिफलाय नमः ।
ॐ कीर्तनीयाय नमः ।

ॐ कृतोत्सवाय नमः ।
ॐ कृतेतरमहानन्दाय नमः ।

ॐ कृतज्ञाय नमः ।
ॐ कृतसत्सुखाय नमः । १०८

॥ इति ककारादि श्री कमठावताराष्टोत्तरशतम् पराभव वैशाख बहुलद्वादश्यां लिखितं रामेण समर्पितं च श्री हयग्रीवदेवाय ॥